# அத்தியாயம் 2
# வருமான சேகரிப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது அரசாங்க வருமான சேகரிப்பில் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா. 900,348,477,876/- இனை (மாகாண சபைகளுக்கு முழுமையாக மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக்கட்டுமான வரியின் கீழான வரி சேகரிப்பின் 1/3 உள்ளடங்கலாக) தேறிய வருமானமாக சேகரித்துள்ளது. பல்வேறுபட்ட வரிகளின் சேகரிப்புக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணப்பட்டு வந்த மொத்த கோவைகளின் எண்ணிக்கையானது 2018.12.31 ஆந் திகதியன்று 1,182,736 ஆக (நி.வை.வ தவிர்த்து) இருந்தது.

## 2.1 வரி செலுத்துனர் பதிவுகளின் விபரங்கள்

குறித்த ஆண்டின் இறுதியில் கொடுப்பனவுக்காக திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஆட்களின் எண்ணிக்கையானது, அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 2.1 - 2018.12.31 அன்றுள்ளவாறு வரி செலுத்துனர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **வருமான வரி** | | |
| ***<u>கூட்டிணைவு</u>*** | | |
| வதிவுள்ள கம்பனிகள் /வதிவற்ற கம்பனிகள் | 53,260 | |
| ***<u>கூட்டிணைவில்லா</u>*** | | |
| தனிப்பட்டவர்கள் | 249,759 | |
| பங்குடமையாளர்கள் | 17,033 | |
| ஆட்களின் குழுமங்கள் | 804 | |
| உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (உ.பொ.செ.வ) இன் கீழ் வருமான வரி செலுத்தும் ஊழியர்கள் (2018.03.31 அன்று உள்ளவாறான) | 664,828 | |
| **மொத்த வருமான வரி செலுத்துனர்கள்** | | **986,684** |
| **<u>ஏனைய வரி செலுத்துனர்கள்</u>** | | |
| பொ.சே.கட்டணத்திற்காக பதிவு செய்யப்பட்ட ஆட்கள் மற்றும் பங்குடமையாளர்கள்(ESC) | 15,587 | |
| பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த ஆட்கள்(VAT) | 26,647 | |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 235 | |
| தேசக் கட்டுமான வரிக்காக பதிவு செய்த ஆட்கள்(NBT) | 95,127 | |
| நிதிச் சேவைகள் மீதான தேசக் கட்டுமான வரிக்காகப் பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 235 | |
| பந்தய அறவீட்டுக்கு பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 633 | |
| சூதாட்ட அறவீட்டுக்கு பதிவு செய்யப்பட்ட ஆட்கள் | 4 | |
| **மொத்த ஏனைய வரி செலுத்துனர்கள்** | | **138,468** |
| உ.பொ.செ. வரி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்கள் | 37,230 | |
| வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரிக்கு பதிவுசெய்த நிறுத்திவைத்தல் முகவர்கள் (நிறுத்தி வைத்தல் முகவர்கள்)* | 492 | |
| விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான நிறுத்தி வைத்தல் வரி (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 9,768 | |
| முத்திரைத் தீர்வை (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 9,914 | **57,404** |
| **2018.12.31 இலுள்ளவாறு வரி செலுத்துனர்கள் / வரிக் கோவைகளின் மொத்த எண்ணிக்கை** | | **1,182,736** |

## 2.2 மொத்த இறைவரி சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான சேகரிப்பான ரூபா 900,348 மில்லியனானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 63,830 மில்லியனால் அதிகரித்துள்ளது. இந்த அடைவானது பிரதானமாக, RAMIS முறைமை அடங்கலாக, இணக்கப்பாட்டின் வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கலில் உ.இ.தி மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகவே சாத்தியமாகியுள்ளது.

குறித்த ஆண்டில் அரசாங்க வருமானத்திற்கு உ.இ.தி இனால் செய்யப்பட்ட பங்களிப்பு மொத்த உள்நாட்டு இறைவரி விகிதாசாரம் 46.89%ஆக இருந்துள்ளது. ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகைகளின் கீழான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமான சேகரிப்பானது இத்தகைய அடைவின் 87.56%இனைக் குறிப்பிடுகின்றது. தேறிய வருமான சேகரிப்பின் ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகையின் கீழ் வருமானத்தினை ஒப்பிடும்போது மொத்த வருமான சேகரிப்பானது(நாணயக் கொள்கை திணைக்களத்தின் கீழ் சேர்க்கப்படுகின்ற சமூகப் பொறுப்பு விதிப்பனவு மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை வரி மற்றும் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட தேசக் கட்டுமான வரியின் கீழான சேகரிப்பின் 1/3) 84.05% இனைக் குறிப்பிடுகின்றது.

2017 ஆம் ஆண்டில் 27.48% ஆக இருந்த வருமான வரி சேகரிப்பானது 2018 இல் 28.59% இற்கு அதிகரித்துள்ள அதேவேளையில், பெயரளவிலான நியதிகள் 11.98% இனால் அதிகரித்துள்ளது. அதாவது முன்னைய ஆண்டில் ரூபா. 229,842 மில்லியனிலிருந்து 2018 ஆம் ஆண்டில் ரூபா. 257,367 மில்லியனுக்கு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் வருமான வரி சேகரிப்பானது 17.19% பற்றாக்குறையினைப் பிரதிபலிக்கின்றது. இந்த வீழ்ச்சிக்கான காரணம், நட்டம் ஈட்டுதல் அல்லது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் என்பவற்றை கருத்தில் கொள்ளாது ஒவ்வொரு நபரும் பொ.சே.க இற்கு பொறுப்புடையவராக்கும் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகும். பொ.சே.க ஆனது கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய வருமான வரிக்கு எதிராக கோரப்படலாம் ஆகையினால் வருமான வரி சேகரிப்பானது கணிசமான அளவு வீழ்ச்சியைக்காட்டியது.


முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெ.சே.வ. சேகரிப்பானது 4.04% இனாலும் அதன் பெயரளவுப் பெறுமதியில் ரூபா. 17,911 இனாலும் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்கான காரணம் வதிவிட விடுதி மற்றும் சில பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் வழங்கப்பட்ட விலக்களிப்புகளை முடிவுறுத்தியது ஆகும்.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உ.இ. சட்டத்தின் சட்டவாக்கம் பிரகாரம், மூலதன அதிகரிப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் 104 சேகரிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட கடன் மீள செலுத்துகை விதிப்பனவு, 4,501 மில்லியன்களை உ.இ.தி இன் மொத்த வருமாத்துக்கு பங்களிப்பு செய்துள்ளது. அரச உத்தியோகத்தர்களுக்கு அரச வாகன உரிமம் வழங்கப்பட்டதன் காரணமாக வாகனங்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது. அதன் காரணமாக வாகன உரித்துடமை விதிப்பனவானது கடந்த வருடத்தில் பெறுமதியில் ரூபா 541 மில்லியனாக 32.75% ஆல் அதிகரித்துள்ளது.

ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகையின் கீழான வருமான ஒப்பீடானது அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளதுடன் வரைபடம் 01 இன் மூலமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சலானது அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளதுடன் அது வரைபு 02 இன் மூலமாக விபரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2 – மொத்த வருமான சேகரிப்பு – 2018


| வரிவகை | வருமான மதிப்பீடு ரூபா | வருமான மதிப்பீடு ரூபா | சேகரிப்பு வருமான மதிப்பீட்டின் % | சேகரிப்பு வருமான மதிப்பீட்டின் % |
|---|---|---|---|---|
| வருமான வரி | 310,800,000,000 | 257,366,657,198 | 82.81% | 28.59% |
| மூலதன அதிகரிப்பு வரி | 1,800,000,000 | 104,148,162 | 5.79% | 0.01% |
| பெறுமதி சேர் வரி | 550,000,000,000 | 461,650,624,889 | 83.94% | 51.27% |
| தேசக் கட்டுமான வரி | 87,000,000,000 | 105,690,527,186 | 121.48% | 11.74% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 59,200,000,000 | 52,978,509,494 | 89.49% | 5.88% |
| கடன் மீளளிப்பு விதிப்பனவு | 15,000,000,000 | 4,501,166,919 | 30.01% | 0.50% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1,000,000,000 | 2,469,578,624 | 246.96% | 0.27% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் விதிப்பனவு | 1,800,000,000 | 1,196,346,653 | 66.46% | 0.13% |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | 1,650,000,000 | 2,191,685,363 | 132.83% | 0.24% |
| குடியகல்வு வரி | 15,000,000 | 16,682,442 | 111.22% | 0.00% |
| முத்திரைத் தீர்வை | - | 12,026,430,018 | - | 1.34% |
| பொருட்கள் சேவைகள் வரி | - | 2,000 | - | 0.00% |
| புரள்வு வரி | - | 88,934,025 | - | 0.01% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | - | 40,986,382 | - | 0.00% |
| நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவு | - | 26,198,521 | - | 0.00% |
| **மொத்த இறைவரி சேகரிப்பு** | **1,028,265,000,000** | **900,348,477,876** | **87.56%** | **100.00%** |



## 2.3. மொத்த வருமானப் பாய்ச்சல்


| அட்டவணை 2.3 - மொத்த இறைவரிப் பாய்ச்சல் 2018 | | |
|---|---|---|
| மாதம் | வருமான சேகரிப்புரூபா | திரட்டிய வருமான சேகரிப்பு ரூபா |
| ஜனவரி | 78,342,927,072.99 | 78,342,927,072.99 |
| பெப்ரவரி | 79,501,207,317.93 | 157,844,134,390.92 |
| மார்ச் | 60,901,894,239.84 | 218,746,028,630.76 |
| ஏப்ரல் | 77,520,634,503.41 | 296,266,663,134.17 |
| மே | 73,074,031,894.04 | 369,340,695,028.21 |
| ஜூன் | 55,603,249,413.05 | 424,943,944,441.26 |
| ஜூலை | 70,262,920,152.60 | 495,206,864,593.86 |
| ஆகஸ்ட் | 83,254,250,524.70 | 578,461,115,118.56 |
| செப்டெம்பர் | 81,423,949,309.83 | 659,885,064,428.39 |
| ஒக்டோபர் | 78,120,615,523.85 | 738,005,679,952.24 |
| நவம்பர் | 92,058,464,617.92 | 830,064,144,570.16 |
| டிசெம்பர் | 63,073,530,997.75 | 893,137,675,567.91 |

வரைபு 02
வருமானப் பாய்ச்சல்- 2018




## 2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு

| 2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு | | | |
|---|---|---|---|
| வரி வகை | 2018 வருமான சேகரிப்பு ரூபா: | 2017 வருமான சேகரிப்பு ரூபா: | சேகரிப்பில் உள்ளவாறான அதிகரிப்பு/ வீழ்ச்சி% |
| வருமான வரி | 257,366,657,198 | 229,841,806,636 | 11.98% |
| மூலதனஅதிகரிப்பு வரி | 104,148,162 | - | - |
| பெறுமதிசேர் வரி | 461,650,624,889 | 443,739,474,789 | 4.04% |
| தேசக் கட்டுமான வரி | 105,690,527,186 | 101,824,565,352 | 3.80% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 52,978,509,494 | 44,719,757,960 | 18.47% |
| கடன் மீளளிப்பு விதிப்பனவு | 4,501,166,919 | - | - |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 2,469,578,624 | 1,929,034,608 | 28.02% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,196,346,653 | 1,333,904,584 | -10.31% |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | 2,191,685,363 | 1,650,961,000 | 32.75% |
| குடியகல்வு வரி | 16,682,442 | 4,097,115 | 307.18% |
| முத்திரைத் தீர்வை | 12,026,430,018 | 11,377,134,752 | 5.71% |
| பொருட்கள் சேவைகள் வரி | 2,000 | 115,977 | -98.28% |
| புரள்வு வரி | 88,934,025 | 20,753,568 | 328,52% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 40,986,382 | 15,947,317 | 157.01% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 26,198,521 | 52,769,318 | -50.35% |
| காணி வரி | - | 7,382,158 | -100% |
| **மொத்த இறைவரி சேகரிப்பு** | **900,348,477,876** | **836,517,705,134** | **7.63%** |




## 2.5 முத்திரைத் தீர்வை, தேசக்கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல்

2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட உரிய சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட பின்வரும் வருமான வகையீடுகள் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தேசக்கட்டுமான வரி சேகரிப்பில் 33.33%

முத்திரைத் தீர்வைசேகரிப்பில் 100%

அட்டவணை 2.5 ஆனது மொத்த சேகரிப்பு மற்றும் உரிய வரிகளின் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வரி வருமான தொகை என்பனவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.5 – வரி வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் - 2018**

| | மொத்த சேகரிப்பு (ரூபா) | மாகாண சபைகளுக்கு மாற்றல் தொகை (ரூபா) | % |
|---|---|---|---|
| தேசக் கட்டுமான வரி | 105,690,527,186 | 32,789,366,798 | 33.33% |
| முத்திரைத் தீர்வை | 12,026,430,018 | 12,026,430,018 | 100% |

## 2.6 வருமான சேகரிப்பு – சுய மதிப்பீடும் ஏனையவையும்

உத்தியோகபூர்வ வரி மதிப்பீடுகளின் மூலமான மொத்த சேகரிப்பில் அநேகமாக முழுமையாக பங்களிப்புச் செய்த சுய மதிப்பீடுகளுக்கான கொடுப்பனவுகள் (இறக்குமதிகள் மீதான பெ.சே.வ, த.க.வ மற்றும் பொ.சே.க நீங்கலாக) குறித்த ஆண்டிற்கான மொத்த வருமான வரி திரட்டின் 5% ஆக அமைந்திருந்தது. இவ் வருடத்தின் போது முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகள் காரணமாக முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் பெறப்பட்ட வருமான

சேகரிப்பானது சிறிய அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும் இது சுய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருமானத்தினை சேகரிக்கும் உ.இ.தி இன் நோக்கத்தின் முதன்மைப் பகுதியான சுய இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகும். இது தொடர்பில் எடுக்கப்பட்ட தேவையான நடவடிக்கைகள் மற்றும் வசதிகள் தொடர்ச்சியாக இந்த வெற்றிக்கு வழிவகுகத்தன. அட்டவணை 2.6 ஆனது தொகைகளுக்கிடையிலான ஒப்பீட்டினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.6 :- சுய மதிப்பீடு மற்றும் ஏனையவற்றின் அடிப்படையிலான சேகரிப்பின் ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்வு**

| | 2016 (ரூபா'000) | | 2017(ரூபா'000) | | 2018(ரூபா'000) | |
|---|---|---|---|---|---|---|
| | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | பிற |
| வருமான வரி | 220,471,725 | 17,926,886 | 217,555,269 | 12,286,538 | 257,350,666 | 15,991,324 |
| பெசேவ (இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 161,404,285 | 6,710,993 | 269,545,383 | 5,801,137 | 282,477,652 | 9,550,364 |
| தேகவ (இறக்குமதிகள் மீதான தேகவ நீங்கலாக) | 53,290,159 | 2,313,174 | 69,034,384 | 4,009,688 | 85,523,090 | 2,486,270 |
| பொசேக (இறக்குமதிகள் மீதான பொசேக நீங்கலாக) | 19,024,527 | 848,146 | 41,834,227 | 725,821 | 50,050,090 | 5,000,577 |
| ஏனையவை | 15,732,516 | 24,926 | 18,524,161 | 27,648 | 22,662,101 | 58,045 |
| மொத்தம் | **469,923,212** | **27,824,125** | **616,493,424** | **22,850,832** | **698,063,599** | **33,086,580** |
| மொத்த வருமானத்தின் நூற்று வீதம் % (இறக்குமதிகள் மீதான பெசேவ தேகவ மற்றும் பொசேக நீங்கலாக) | 94% | 6% | 96% | 4% | 95% | 5% |

## 2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு


அட்டவணை 2.7 ஆனது 2018 இல் அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செய்யப்பட்ட பங்களிப்பு மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் போக்குகளையும் காட்டுகின்றது. வரைபு 04 ஆனது இத்தகைய பங்களிப்புகளை விபரிக்கின்றது. 2018 இல் மொத்த அரசாங்க வருமானமானது ரூபா 1,919,973 மில்லியனுக்கு (இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை –2018) அதிகரித்துள்ளதுடன், மொத்த அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 46.89% பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதையும் பதிவு செய்துள்ளது

2018 ஆம் ஆண்டில் மொ.உ. உ. வீதத்தில் உ.இ.தி இன் வருமான சேகரிப்பு 6.23% ஆகும்.

**அட்டவணை 2.7 – அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும் பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும்**

| ஆண்டு | அரசாங்க வருமானம் ரூபா மில்.* | உ.இ.தி. சேகரிப்பு ரூபா மில். | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு % | பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் ரூபா மில்.** | மொ.உ.உ. உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| 2014 | 1,195,206 | 514,161 | 43.02% | 10,361,151 | 4.96% |
| 2015 | 1,454,878 | 560,422 | 38.52% | 10,950.621 | 5.12% |
| 2016 | 1,686,061 | 641,547 | 38.05% | 11,996,083 | 5.35% |
| 2017 | 1,831,531 | 836,518 | 45.67% | 13,418,287 | 6.23% |
| 2018 | 1,919,973 | 900,348 | 46.89% | 14,449,931 | 6.23% |

மூலம்: - *இலங்கை மத்திய வங்கி(ஆண்டறிக்கை 2018)




## 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

வரி செலுத்துனர்கள் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நேரத்தில் வரி விபரத்திரட்டுக்களை நிரப்பி வரி செலுத்துவதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது, குறித்த ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

அதற்கிணங்க, 2017/2018 வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் உரிய திகதியிலுள்ள நிறுவனமல்லா வருமான வரி விபரத்திரட்டுக்களை கோவைப்படுத்தும் வீதாசாரமானது 31% ஆக இருந்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியிலிருந்தான ஒரு மாத காலப்பகுதியினுள் இது 38% இற்கு அதிகரித்திருந்தது. உரிய திகதியிலிருந்து இரண்டு மாதங்களின் பின்னரான இணக்கப்பாட்டு வீத வரியானது 42% இல் இருந்துள்ளது.

நிறுவன துறையினைப் பொறுத்தவரையில், உரிய திகதியில் 47% ஆக இருந்துள்ளதுடன், உரிய திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் 51% ஆகவும் இருந்துள்ளது. நிறுவன வரி வீதமானது உரிய திகதியிலிருந்தான இரண்டு மாதங்களிலுள்ளான இணக்கப்பாட்டு வீத வரியானது 53% இல் இருந்துள்ளது.

சுய மதிப்பீட்டு முறைமையின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட மட்டமாக இல்லாத போதும் அனைத்து வரிகளினதும் விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதமானது பெரும்பாலும் நிலையானதாக இருந்துள்ளது. உ.இ.தி ஆனது விபரத்திரட்டின் இணக்கப்பாட்டினை அடைவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கைகள எடுத்துவருகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டிலுள்ள வருமான வரி (கூட்டிணைவற்ற) மற்றும் தேசக் கட்டுமான வரி வீதத்திலும் கணிசமான வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. இத்தகைய வீழ்ச்சிக்கான காரணம் தனிநபர் வரி கோப்புக்கள் அதிகரித்துள்ளதுடன் உதவிகள் வழங்கப்பட்ட போதும் இ-கோப்பிடல் முறைமையினைப் பயன்படுத்தி விபரத்திரட்டுக்களினைச் சமர்ப்பிப்பது தொடர்பில் அத்தகைய வரி செலுத்துனர்கள் சரியான புரிந்துணர்வினைக் கொண்டிருக்காமை என்பவற்றை காரணமாக குறிப்பிடலாம். அட்டவணை 2.8.1 ஆனது 2013/2014 இலிருந்து 2017/2018 வரையிலான ஆண்டுகளின் கொடுப்பனவுத் திகதியிலுள்ளதும், கொடுப்பனவுத் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் உள்ளதுமான வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாட்டினையும் காட்டுகின்றது. அட்டவணை 08 ஆனது ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதங்களினைக் காட்டுகின்றது.

| அட்டவணை 2.8.1– வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு 2013/2014–2017/2018 | | | |
|---|---|---|---|
| வரி மதிப்பீட்டாண்டு | துறை | முடிவுத் திகதி மீதான இணக்கப்பாடு | முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள்ளான இணக்கப்பாடு |
| 2013/2014 | நிறுவனம் | 56% | 61% |
| | நிறுவனமல்லாத | 42% | 57% |
| 2014/2015 | நிறுவனம் | 52% | 58% |
| | நிறுவனமல்லாத | 47% | 62% |
| 2015/2016 | நிறுவனம் | 30% | 46% |
| | நிறுவனமல்லாத | 48% | 59% |
| 2016/2017 | நிறுவனம் | 41% | 45% |
| | நிறுவனமல்லாத | 45% | 56% |
| 2017/2018 | நிறுவனம் | 47% | 51% |
| | நிறுவனமல்லாத | 31% | 38% |

| அட்டவணை 2.8.2– ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு | | | | |
|---|---|---|---|---|
| வருடம் | பெசேவ | தேகவ | உபொசெவ | |
| 2016 ஆண்டு | 71% | 31% | வரி மதிப்பீட்டாண்டு 2015/2016 | 57% |
| 2017ஆண்டு | 47% | 21% | வரி மதிப்பீட்டாண்டு2016/2017 | 14% |
| 2018ஆண்டு | 42% | 17% | வரி மதிப்பீட்டாண்டு 2017/2018 | 41% |

## 2.9. வருமான வரி சேகரிப்பு

கூட்டிணைவு வருமான வரி, தனிநபர் வருமான வரி, பங்குடைமை வருமான வரி, பங்குலாப வரி, அளிப்புகை வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி என்பன 2018 இல் ரூபா 257,367 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது 2017 இல் சேகரிக்கப்பட்ட ரூபா 229,842 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 11.98% அதிகரிப்பாகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான வரி சேகரிப்பானது அதன் மொத்த வருமானத்தில் 28.59% ஆகும். இது 2017 இல் 27.48% ஆகவும் இருந்துள்ளது.

### 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம்


மொத்த வருமான வரி சேகரிப்புக்கான நிறுவன துறையிலிருந்தான பங்களிப்பானது சேகரிக்கப்பட்ட மொத்த வருமான வரியில் ரூபா 159,133 மில்லியன் அல்லது 62% ஆகும். நிறுவனமல்லா துறையானது ரூபா 98,233 மில்லியனை அல்லது 38% பங்களிப்பினை வழங்கியுள்ளது.

அட்டவணை 2.9.1 அதன் பொழிப்பினைக் காட்டுவதுடன் வரைபு 05 அது தொடர்பில் விபரிக்கின்றது.

| அட்டவணை 2.9.1 : - நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி சேகரிப்பு | | | | |
|---|---|---|---|---|
| | 2018 | | 2017 | |
| | வரி சேகரிப்பு (ரூபா) | % | வரி சேகரிப்பு (ரூபா) | % |
| நிறுவனம் * | 159,133,186,810 | 62% | 132,871,563,934.00 | 58% |
| நிறுவனமல்லாத ** | 98,233,470,388 | 38% | 96,970,242,702.00 | 42% |
| மொத்தம் | **257,366,657,198** | **100%** | **229,841,806,636.00** | **100%** |

* 2017 இல் 17,074 மில்லியன் மற்றும் 2018 இல் 21,470 மில்லியன் பங்குலாப வரிகள் உள்ளடங்கலாக

** வட்டி வருமானம், நிறுவனத் துறையினால் வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் உ.போ.செ. வரித் திட்டத்தின் கீழ் பணியாட்கள் செலுத்திய வருமான வரி என்பவற்றில் கழிக்கப்பட்டு அளிக்கப்பட்ட நி.வை.வ இனை உள்ளடக்கும்




### 2.9.2 மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு

அட்டவணை 2.9.2 ஆனது குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி பகுப்பாய்வின் பொழிப்பினை (ஊழியம் மற்றும் ஏனையவை) காட்டுகின்றது.

| **அட்டவணை 2.9.2 - வருமான வரி சேகரிப்பு - 2018** | | |
|---|---|---|
| **மூலம்** | **சேகரிப்பு(ரூ.மில்.)** | |
| **ஊழியம்** | | |
| உ.பொ.செ.வரி திட்டம் | 40,042.17 | |
| தவறுகையிலுள்ள வரிக்கான தண்டப்பணம் பற்றிய மதிப்பீடுகள் | 1,342.54 | **41,384.71** |
| **ஏனையவை** | | |
| சுய மதிப்பீடு மற்றும் தண்டப் பணம் பற்றிய மதிப்பீடுகள் | 137,359.64 | |
| வட்டி, வாடகைமற்றும்விதித்துரைக்கப்பட்டகட்டணங்கள்மீதான நிறுத்தி வைத்தல் வரி | 46,413.76 | |
| பிற மூலத்தின் கழிப்பனவு | 32,132.62 | |
| **மொத்த சேகரிப்பு** | | **257,290.73** |
| கழி: மீளளிப்பு | | (75.93) |
| **தேறிய சேகரிப்பு** | | **257,366.66** |

நிறுத்தி வைத்தல் வரி முறைமையினுள் உள்ளடங்காத வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில், வாழ்க்கைத் தொழில் மற்றும் ஏனைய சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்ற தண்டப் பணங்களினுடனான சுய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலமான தொகை ரூபா 137,360 மில்லியன்கள் ஆகும்.

## 2.10. பெறுமதி சேர்வரி சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பானது, முன்னைய ஆண்டுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 443,739 மில்லியனுடன் உடன் ஒப்பிடுகையில் ரூபா 17,911 மில்லியன் அதிகரிப்பினை அல்லது 4.04% வளர்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும் குறித்த ஆண்டுக்கான மதிப்பீடான ரூபா .550,000 மில்லியனுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டுக்கான வருமானமானது ரூபா 88,349 மில்லியன் வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. வதிவிட விநியோகம் மற்றும் வானூர்திகள் அல்லது உலங்குவானூர்திகளின் இறக்குமதி மற்றும் விநியோகம், வெயில் காப்புக் கண்ணாடி, அரிந்த மரம் மற்றும் வீட்டுபாவனைக்கான துணி என்பவற்றிற்கு அளிக்கப்பட்ட வரி விலக்கினை முடிவுறுத்தியதன் காரணமாக பெ.சே.வ சேகரிப்பில் அதிகரிப்பு காணப்பட்டது. வீட்டு விநியோகம் மற்றும் இறக்குமதிகள் கடந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு உயர்ச்சியையோ அல்லது வீழ்ச்சியையோ காட்டவில்லை. குறித்த ஆண்டுக்காக சேகரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு பெசேவ ரூபா282,487 மில்லியனாகும். இத் தொகையானது 2017 ஆம் ஆண்டுக்கான பெறுமதி சேர் வரியான ரூபா 275,346 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.59% அதிகமாகும். 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீது சேகரிக்கப்பட்ட பெசேவ முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 6.4% அதிகரிபினைப் பதிவு செய்துள்ளது.


அட்டவணை 2.10.1 ஆனது 06 ஆம் வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி, மீளளிப்புக்கள் மற்றும் தேறிய சேகரிப்பு என்பவற்றின் துறை வாரியான மொத்தத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.10.1 – பெறுமதிசேர் வரி மொத்த சேகரிப்பும் மீள் கொடுப்பனவுகளும்**

| துறை | 2017 | | 2018 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | | மொத்த சேகரிப்பு (ரூபா மில்.) | | மீளளிப்பு | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | |
| **உற்பத்தித் துறை** | | 75,846.31 | | 80,979.04 | 831.18 | | 80,147,86 |
| **உற்பத்தியல்லாத துறை** | | | | | | | |
| -சேவைகள் | 149,447.26 | | 146,501.05 | | | | |
| -நிதிச் சேவைகள் | 50,052.95 | 199,500.21 | 55,838.29 | 202,339.34 | | 202,339.34 | 202,339.34 |
| இறக்குமதிகள் | | 168,392.95 | | 179,163.48 | 0.06 | | 179,163.42 |
| **மொத்தம்** | | **443,739.47** | | **462,481.86** | **831.24** | | **461,650.62** |

**அட்டவணை 2.10.2–மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு**

| துறை | 2017 | | 2018 | | மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | 2017 | 2018 |
| **உற்பத்தித் துறை** | 75,846,312,316 | 17.09% | 80,147,857,741 | 17.36% | 0.57% | 0.55% |
| **உற்பத்தியல்லா துறை** | 199,500,207,439 | 44.96% | 202,339,344,169 | 43.83% | 1.49% | 1.40% |
| **இறக்குமதிகள் மீதான** | 168,392,955,034 | 37.95% | 179,163,422,979 | 38.81% | 1.25% | 1.24% |
| **மொத்தம்** | **443,739,474,789** | **100.00%** | **461,650,624,889** | **100.0%** | **3.31%** | **3.19%** |




### 2.10.3 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 2.10.3 ஆனது ஒவ்வொரு துறையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உள்நாட்டு வழங்கல்கள் மீதான பெசேவ மற்றும் மொத்தப் பெறுமதி சேர் வரிக்கான அவற்றின் பங்களிப்பு என்பவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.10.3 – பெ.சே.வரி உள்ளூர் மொத்தம் – உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகள்**

| பிரிவுகள் | 2016 (ரூபா மில்.) | 2017 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % | 2018 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % |
|---|---|---|---|---|---|
| வங்கித்தொழில் | 27,770 | 37,150 | 33.78% | 40,117 | 8% |
| காப்புறுதி | 6,371 | 7,313 | 14.79% | 8,180 | 12% |
| ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதி | 10,566 | 13,668 | 29.36% | 16,596 | 21% |
| நிர்மாணம் | 8,230 | 14,542 | 76.70% | 14,908 | 3% |
| மின்சாரம் மற்றும் வாயு | 526 | 674 | 28.14% | 718 | 7% |
| இறக்குமதிகள் | 9,383 | 10,143 | 8.10% | 10,730 | 6% |
| நிதியளிப்பு | 20,242 | 21,121 | 4.34% | 23,326 | 10% |
| தொடர்பாடல் | 7,429 | 19,743 | 165.76% | 17,963 | -9% |
| பெற்றோலிய உற்பத்தி | 175 | 0 | -100.00% | 774 | - |
| குடிவகையும் மதுபானமும் | 1,553 | 18,802 | 1110.69% | 19,937 | 6% |
| வகைப்படுத்தப்படாத சேவைகள் | 39,690 | 82,024 | 106.66% | 74,019 | -10% |
| வகைப்படுத்தப்படாத உற்பத்திகள் | 29,079 | 56,641 | 94.78% | 60,249 | 6% |
| ஏனையவை | 36,091 | 50,053 | 38.69% | 55,838 | 12% |
| **மொத்தம்** | **197,105** | **331,874** | **68.37%** | **343,355** | **3%** |

**2.10.4 - 2018 ஆம் ஆண்டில் பெ.சே.வ தொடர்பில் முக்கிய கொள்கை மாற்றங்கள்**

(i) குறிபிட்ட ஆடைகளுல் பெ.சே.வரிக்கு ஒரு ஆடைக்கான அடிப்படையை மாற்றல்

- மகளிர் உற்காற்சட்டைகள், குறுங்காலுரைகள், பிறிவுகள் மற்றும் பொக்சர் குறுங்காற் சட்டைகள் ஆறு ஆடைகளுக்கு பெ.சே.வரிச் சட்டத்தின் கீழ் சுங்கத்தின் சேகரிப்பு தானத்தில் அமுல் செய்யப்படும் பெ.சே.வ, தே.க.வ மற்றும் ஏனைய வரிகளின் கூட்டிணைக்கப்பட்ட வரி ரூபா 75/- ஆகக் காணப்படும்

(ii) உல்லாச பயனிகளுக்கு பெ.சே.வ மீளளிப்பு திட்டத்தை அறிமுகம் செய்தல்

- மீளளிப்புத் திட்டமானது வர்த்தமானப் பத்திரிகைக் கட்டளை மூலம் நிதி மற்றும் ஊடக அமைச்சினால் தீர்மானிக்கப்படும் திகதி முதல் அமுலில் காணப்படும்.

(iii) பின்வரும் விதிவிலக்குகள் இல்லாமல் செய்யப்பட்டு 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் பெ.சேவரிக்கு பொறுப்புடையதாக்கப்பட்டது

- பின்வரும் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்திற்கு வழங்கப்பட்ட விதிவிலக்குகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 2018, ஆகஸ்ட் 16 முதல் பெ.சே.வரிக்கு பொறுப்புடையதாக்கப்பட்டுள்ளது.

  (i) வானூர்திகள்அல்லது உலங்குவானூர்திகள்

  (ii) வெயில் காப்புக் கண்ணாடிகள்

  (ii) மரம் (அரியப்பட்டது)

  (iii) உள்நாட்டு பாவனைக்கான துணியானது, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்தத்மானப் பத்திரிகையில் குறிபிட்டுள்ளவாறு நாட்டினுள் பிரவேசிக்கும் போது இறக்குமதியில் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வரிக்கு அறவிடப்படும் செஸ் கட்டணத்திற்கு உட்படுத்தப்படும்.

- குத்தகை அல்லது வாடகை தவிர்ந்த வதிவிடவசதியை வழங்குவோருக்கு வழங்கப்பட்ட வரி விலக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 2018 ஆகஸ்ட் 16 முதல் பயனுறுதியாகும் வகையில் வரி விதிப்பனவுக்குட்படுத்தப்படுகின்றது.

(குறிப்பு – நிதி மற்றும் ஊடக அமைச்சின் நெறிப்படுத்தலுக்கு அமைவாக, 2019 மார்ச் 31 வரை வதிவிடவசதியை வழங்குவதில் காணப்பட்ட விலக்களிப்பபைத் தொடர கொள்கை முடிவு எய்தப்பட்டது)

- இறக்குமதி செய்யப்படும் பின்வரும் பொருட்களுக்கு வரிவிலக்கு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் 2018 ஆகஸ்ட் 16 முதல் பயனுறுதியாகும்வகையில் பெ.சே.வ. விதிப்பனவுக்குட்படுத்தப்படுகின்றது. (சிறப்பாக குறிப்பட்டாலன்றி)

1. சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட வானூார்தி இயந்திரங்கள் அல்லது வானூர்தி உதிரிபாகங்கள்
2. திரைப்படம்சார் படம் பிடிக்கும் கருவிகள் மற்றும் படம் காட்டும் கருவிகளும் பாகங்களும் மற்றும் துணை கருவிகளும்.
3. வானூர்தி தூண்டிகள் மற்றும் பாகங்கள்

4. பச்சை வீடுகள், பொலிகுகைகள் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் அல்லது எந்தவொருவகையான தாவரங்களை வளர்ப்போர் பச்சை வீட்டை கட்டுவதற்கான பொருட்கள்
5. சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட துணி

(iv) பின்வரும் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளன

- இறக்குமதி செய்யப்படும் அல்லது விநியோகப்படும் கீழ்வரும் பொருட்களுக்கு குறிப்பிட்ட திகதியிலிருந்து பெ.சே.வ விலக்களிக்கப்படுகின்றது

(i) உள்ளூரில் உற்பத்தியாக்கப்படும் ஆபரணங்களுக்கு 2016 நவம்பர் 22 ஆம் திகதி முதல் எந்தவொருகாலப் பகுதிக்கும்

(ii) வைத்தியசாலை அறைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்கள் தவிர்த்து மருத்துவ நிறுவனங்கள் அல்லது தொழில்சார் நிபுனத்துவமுடைய நபரினால் வழங்கப்படும் அனைத்து சுகாதார கவனிப்பு சேவையை (2018 ஜூலை 2 ஆம் திகதி முதல் எந்தவொரு காலப்பகுதிக்கும் விலக்களிப்பு பொருந்தும்)

(iii) மூப்புநோய் மருத்தவ சேவைகள் அல்லது சிறுவர் கவனிப்புச் சேவைகளுக்கு 2018 ஆகஸ்ட் 16 முதல்

(iv) உள்ளூர் தொலைதொடர்பு வழங்குநர்களுக்கு “எக்ஸ்டேனல் கேட்வே ஒபரேடர்ஸ்” இனால் வழங்கப்படும் சர்வதேச தொலைதொடர்பு சேவைகள் 2018 ஆகஸ்ட் 16 முதல்

(v) நிதிச் சேவைகளில் பெ.சே.வ இன் கீழ் கீழ்வரும் விலக்களிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

-பணச் சட்டம் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளினால் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டமானது நி.சே இல் பெ.சே.வ இலிருந்து 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது

## 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு


குறித்த ஆண்டுக்கான தேசக் கட்டுமான வரி சேகரிப்பானது மொத்த வருமானத்திற்கு ரூபா 105,690 மில்லியனை பங்களிப்புச் செய்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.80% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. மொத்த தேசக் கட்டுமான வரி வருமானத்தில் ரூபா 34,333 மில்லியன் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.11.1 – துறைவாரியாக தேசக் கட்டுமான வரி சேகரிப்பு**

| துறை | | உற்பத்தி | சேவைகள் | இறக்குமதிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தேறிய சேகரிப்பு (ரூபா) | 2017 | 10,894,310,333 | 38,821,335,524 | 19,319,552,697 | **69,035,198,554** |
| | 2018 | 11,179,474,851 | 40,012,958,409 | 20,164,950,986 | 71,357,384,246 |

அட்டவணை 2.11.2 ஆனது 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் தேசக் கட்டுமான வரி வருமான மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்கின்றதுடன், 2018 ஆம் ஆண்டின் பின்னர் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானத்தினையும் குறிப்பிடுகின்றது.

| அட்டவணை 2.11.2 – மதிப்பீட்டுடனான தேசக் கட்டுமான வரி சேகரிப்பு | | |
|---|---|---|
| **ஆண்டு** | **2018** | **2017** |
| வருமான மதிப்பீடு (ரூபா) | 87,000,000,000 | 75,000,000,000 |
| வருமான சேகரிப்பு (ரூபா) | 71,357,384,246 | 69,035,198,554 |
| % | 82% | 92% |




**2.11.1 2018 இல் தேசக் கட்டுமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்**

(i) பின்வருவனவற்றிற்கான விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டு அவை விதிப்பனவுக்குட்படுகின்றன.

- இறக்குமதியாளரினால் மதுபான விற்பனையின் மீதான தற்போதுள்ள விலக்களிப்பு நீக்கப்பட்டு 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் பயனுறதியாகும் வகையில் வரி விதிப்பனவுக்கு உட்படுத்தப்படுகின்றது.

- மது பான இறக்குமதி மற்றும் மதுபான உற்பத்தி வர்த்தகத்தில் பெறப்பட்ட புறள்வினால் அளிக்கப்பட்ட தற்போதைய விலக்களிப்பு நீக்கப்பட்டு தே.க.வரிக்கு பொறுப்புடையதாக்கப்படுகின்றது.

- 2016 நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் ஆனால் 2017 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு மின்சார விநியேகம் பொறுப்புடையதாக்கப்படுகின்றது. 2017 ஏபரல் 1 ஆம் திகதி முதல், இலங்கை மின்சார சபையினால் மட்டுமே மின்சார விநியோகம் பொறுப்புடையதாகும்

ii. பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விலக்களிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- உற்பத்தியாளரினால் உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்ட தேங்காய்ப்பால், தேங்காயெண்ணை, புண்ணாக்கு, தேங்காய் சீவல், தேங்காய்ச் சிரட்டை அல்லது இளநீர் என்பவற்றுக்கு விற்பனையின் போது 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 3 வருடங்களுக்கு

- 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் கட்டுமான ஒப்பந்நத சேவைகள் வழங்கப்பட்டிருப்பின் அத்தகைய சேவைகளுக்கு

- கயாக், கனோ, கைட் சேபிங் மற்றும் டைவிங் அடங்கலாக நீர் விளையாட்டுகளில் பயன்படுத்தப்படும் இயந்திரமயமாக்கப்படாத கருவிகள் மற்றும் உதிரி பாகங்களின் இறக்குமதி

- இறக்குமதியின் போது சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியிட்டின் கீழ் பதியப்பட்ட ஹங்கிளைடிங், பலூன், டிரிகிப்பிள், பரசூட்மற்றும் பார-கிளைடிங் அடங்கலான வான் இயந்திர மயக்கப்படாத கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்

-வெட்டி பின்னர் மெருகூட்டியதன் பின்னர் மீள்ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் இரத்தினகற்கள்

-விவசாய விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பெயரில் நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் இலங்கையில் தயாரிக்கப்படுவதில்லை என்ற நிபந்தனையின் பிரகாரம் பச்சை வீடுகள், பொலிகுகைகள் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் அல்லது எந்தவொரு வகையான தாவரங்களை வளர்ப்போர் பச்சை வீட்டைகட்டுவதற்கான பொருட்கள்


- 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் பணச் சட்டம் சட்டத்தின் (422 ஆம்அதிகாரத்தின்) கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக்காப்புறுதித் திட்டத்தினால் வழங்கபப்படும் எந்தவொரு சேவையும்

## 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தின் தொகையாக ரூபா 52,978 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன், மொத்த வருமான சேகரிப்பில் அதன் பங்களிப்பு 5.88% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 89% ஆகும்.

**அட்டவணை 2.12 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு**

| ஆண்டு | 2018 | 2017 |
|---|---|---|
| வருமான மதிப்பீடு (ரூபா) | 59,200,000,000 | 48,000,000,000 |
| வருமான சேகரிப்பு (ரூபா) | 52,978,509,494 | 44,719.757,960 |
| % | 89% | 93% |




## 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 41,385 மில்லியனாக இருந்துள்ளது.

## 2.14 நிறுத்திவைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது)

நிறுத்தி வைத்தல் வரியானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 35,991,293,842 தொகையுடைய வருமானத்தினை பதிவு செய்துள்ளது. இது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உ.இ சட்டத்தின் கீழ் திறைசேரி உண்டியலின் விலக்களிப்பு காரணமாக ரூபா 15,360 மில்லியன் குறைவை பதிவு செய்துள்ளது. ஆயினும் நிறுத்திவைத்தல் வரியின் கீழ் சிறப்புக் கட்டணம் காரணமாக ரூபா 10,4222 அதிகரிப்பைக்காட்டியது.

### 2.15 மூலதன ஈட்டுகை வரி


2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உ.இ. சட்டத்தின் சட்டவாக்கத்தின் பிரகாரம் மூலதன ஈட்டுகை வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அது இந்த வருடகாலத்தில் ரூபா 104,148,162 இனை வருமானமாக பதிவு செய்தது. இது மதிப்பிடப்பட்ட பெறுமானத்தின் 5.79% ஆகும்.

### 2.16 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான சேகரிப்பானது ரூபா 2,470 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டுக்கான தொகையுடன் ஒப்பிடுகையில் 28.02% இனால் வளர்ச்சியடைந்துள்ளமையினைக் காட்டுகின்றது. இது குறித்த ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,470 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 2.13– பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு**

| ஆண்டு | 2018 | 2017 |
|---|---|---|
| வருமான மதிப்பீடு (ரூபா) | 1,000,000,000 | 1,800,000,000 |
| வருமான சேகரிப்பு (ரூபா) | 2,469,578,624 | 1,929,034,608 |
| % | 247% | 107% |




## 2.17 மோட்டார் வாகன உரித்துடமை விதிப்பனவு

வாகன உரித்துடமை வதிப்பனவானது 2015 ஆம் அண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மோட்டார் வாகன இறக்குமதி உரிமக் கட்டணத்திற்குப் பதிலாக 2016 ஜனவரி 1 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விதிப்பனவானது, ஏதேனும் வங்கியில் சென்மதிக் கடிதமொன்றினைத் திறக்கும் நேரத்திலேயே மோட்டார் வாகன இறக்குமதியினை மேற்கொள்கின்ற ஒவ்வொரு இறக்குமதியாளரினாலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், வாகன உரித்துடமை விதிப்பனவிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 2,192 மில்லியனாக இருந்துள்ளதுடன் குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.542 மில்லியன் மிகையாகும்.

### 2.18 முத்திரைத் தீர்வை சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் முத்திரைத் தீர்வையிலிருந்து ரூபா 12,026 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வை மாற்றீடு) சட்டத்தின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை மொத்த சேகரிப்பானது உரிய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. திணைக்களமானது முத்திரைத் தீர்வை இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் மதியுரை மற்றும் மேற்பார்வை விஜயங்களை நடாத்தியுள்ளது

### 2.19 கடன் மீளளிப்பு விதிப்பனவு


கடன் மீளளிப்பு விதிப்பனவானது 2018 ஆம்ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் அறிமுகப்பட்டுள்ளதுடன் 2018 ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்பட்டது. கடந்த வருடத்தின் கடன் மீளளிப்பு விதிப்பனவின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 15,000,000,000 ஆக காணப்பட்ட அதே வேளை சேகரிப்பு ரூபா 4,501,166,919 ஆக காணப்பட்டது. சட்டத்தை அமுல்படுத்த பிந்தியதன் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானத்துடன் ஒப்பிடும்போது அது 30.01% ஆக காணப்பட்டது.

### 2.20 2014 இலிருந்து 2018 வரையிலான உள்நாட்டு இறைவரி சேகரிப்பு (வரி ரீதியாக)

அட்டவணை 2.14 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2014- 2018 – வரி அடிப்படை பகுப்பாய்வு

| வரி வகை | 2014 | | 2015 | | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % |
| வருமான வரி | 191,960 | 37.33 | 256,435 | 47.56 | 238,399 | 37.16 | 229,842 | 27.48 | 257,367 | 28.59 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,155 | 1.2 | 6,148 | 1.1 | 20,458 | 3.19 | 44,720 | 5.35 | 52,978 | 5.88 |
| பெறுமதிசேர் வரி | 237,915 | 46.27 | 214,237 | 38.23 | 283,451 | 44.18 | 443,739 | 53.05 | 461,651 | 51.27 |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு | 815 | 0.16 | 832 | 0.15 | 1,884 | 0.29 | 1,929 | 0.24 | 2,470 | 0.27 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 2,048 | 0.4 | 1,395 | 0.25 | 738 | 0.12 | 1,334 | 0.16 | 1,196 | 0.13 |
| முத்திரைத் தீர்வை | 7,918 | 1.54 | 11,596 | 2.07 | 10,651 | 1.66 | 11,377 | 1.36 | 12,026 | 1.34 |
| தேசக் கட்டுமான வரி | 65,354 | 12.71 | 67,911 | 12.12 | 84,066 | 13.1 | 101,825 | 12.17 | 105,690 | 11.74 |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | - | - | - | - | 1,579 | 0.25 | 1,651 | 0.2 | 2,192 | 0.24 |
| மூலதன ஈட்டுகை வரி | - | - | - | - | - | - | - | - | 104 | 0.01 |
| கடன் மீளளிப்பு அறவீடு | - | - | - | - | - | - | - | - | 4,501 | 0.5 |
| நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீடு | 842 | 0.16 | 753 | 0.13 | 259 | 0.04 | 53 | 0.01 | 26 | 0 |
| சமூகப் பொறுப்பு வரி | 85 | 0.02 | 20 | 0 | 1 | 0 | - | - | - | - |
| பொருட்கள் சேவைகள் வரி | 3 | - | 0.88 | - | 1.59 | - | 0.11 | 0 | - | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 14 | - | 12 | - | 8 | - | 16 | 0 | 41 | 0 |
| புரள்வு வரி | 472 | 0.09 | 16 | - | 17 | - | 20 | 0 | 89 | 0.01 |
| குடியகல்வு வரி | - | - | - | - | 11 | - | 4 | 0 | 17 | 0 |
| வெளிநாட்டவர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்ட காணி மீதானவரி | 579 | 0.11 | 1,066 | 0.19 | 23 | - | 7 | 0 | - | - |
| மொத்த சேகரிப்பு | **514,160** | **100** | **560,422** | **100** | **641,546** | **100** | **836,517** | **100** | **900,348** | **100** |

**வரைபு 10**
**உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2014-2018- வரி அடிப்படை பகுப்பாய்வு**



# அத்தியாயம் 3

# செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்


குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் மொத்த செலவினமானது ரூபா 4,134 மில்லியனாக இருந்துள்ளதுடன், இது முன்னைய ஆண்டுத் தொகையான ரூபா 4,337 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 4.68% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. மொத்த செலவினத்தில் 83.21% அல்லது ரூபா 3,440 மில்லியனானது மீண்டுவரும் செலவினத்திற்காக செலவிடப்பட்டது. 2017 இல் இச் செலவினமானது ரூபா 3,014 மில்லியனாக இருந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் வேதனாதிகள் மீதான செலவினமானது 15.7% இனால் அதிகரித்துள்ளதுடன், இது 2017 இல் ரூபா 2,103 மில்லியனாக இருந்துள்ளது. இது மொத்தச் செலவினத்தின் 58.86% இனையும் மீண்டுவரும் செலவினத்தில் 70.73% இனையும் கொண்டிருந்ததுடன், தனியொரு வகையீட்டுக்கான மிகப் பெரிய தொகையாகவும் அமைந்திருந்தது.


இந்த ஆண்டு காலப்பகுதியில், மூலதனச் செலவினமானது 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 47.51% வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளதுள்ளதுடன் 694 மில்லியனாக காணப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,322 மில்லியனாக காணப்பட்டது. திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினமானது, 16.79% இனைப் பிரதிபலிக்கின்றது.

திணைக்களமானது திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் அமுலாக்கலுக்காக குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 289 மில்லியனை முதலீடு செய்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் RAMIS கருத்திட்டத்திலான மூலதனச் சொத்தின் கொள்வனவு மட்டுபடுத்தப்படதன் காரணமாக இது 73% வீழ்ச்சியைக்காட்டியது. இந்த வருட காலப்பகுதியினுள் புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை அமுல்படுத்துவதிலான செலவினம் ரூபா 133 மில்லியனாக காணப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களத்தவர்கள் அல்லாதோருக்கு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது இச் செலவினத்திற்குரிய காரணமாகும்

### 3.1 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு

| அட்டவணை3.1:- மொத்த செலவினம் – 2016, 2017 மற்றும் 2018 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விபரணம் | 2016 | | 2017 | | 2018 | |
| | (ரூ.'000) | % | (ரூ.'000) | % | (ரூ.'000) | % |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| வேதனாதிகள் | 1,984,484 | 48.87% | 2,103,065 | 48.49% | 2,433,263 | 58.86% |
| பிரயாணச் செலவுகள் | 33,172 | 0.82% | 122,367 | 2.82% | 37,823 | 0.91% |
| வழங்கல்கள் | 107,990 | 2.66% | 108,890 | 2.51% | 116,243 | 2.81% |
| பராமரிப்பு | 52,562 | 1.29% | 60,722 | 1.40% | 72,648 | 1.76% |
| ஒப்பந்த சேவைகள் | 624,199 | 15.37% | 579,474 | 13.36% | 737,221 | 17.83% |
| இடமாற்றங்கள் | 38,752 | 0.95% | 40,088 | 0.92% | 42,964 | 1.04% |
| **உப மொத்தம்** | **2,841,159** | **69.96%** | **3,014,606** | **69.51%** | **3,440,162** | **83.21%** |
| **மூலதனச் செலவினம்** | | | | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 29,425 | 0.72% | 61,083 | 1.41% | 52,668 | 1.27% |
| மூலதன ஆதனங்கள் சுவீகாரம் | 27,130 | 0.67% | 53,439 | 1.23% | 38,900 | 0.94% |
| திறன் கட்டியெழுப்புதல் | 55,031 | 1.36% | 127,817 | 2.95% | 180,923 | 4.38% |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 1,108,385 | 27.29% | 1,067,931 | 24.62% | 283,834 | 6.99% |
| முதலீடு (புதியஉ.இ. சட்டம்) | - | - | 12,290 | 0.28% | 132,813 | 3.21% |
| **உப மொத்தம்** | **1,219,971** | **30.04%** | **1,322,560** | **30.49%** | **694,138** | **16.79%** |
| **மொத்தம்** | **4,061,130** | **100.00%** | **4,337,166** | **100.00%** | **4,134,300** | **100.00%** |




## 3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

2018 இல் திணைக்களத்தின் மொத்த செலவினமானது, ரூபா 4,134.30 மில்லியனாக இருந்துள்ளதுடன், சேகரிக்கப்பட்ட வருமானமானது ரூபா 900,348 மில்லியனாக இருந்துள்ளது. ஆகையால், உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரமானது (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்கும் சேகரிக்கப்பட்ட வருமானம்) 217.1 ஆகும். வேறு முறையில் கூறுவதாயின், ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவானது 46 சதமாக இருந்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி என்பன நீங்கலாக ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவு 59 சதமாக இருந்துள்ளது. (முன்னைய ஆண்டில் இத்தொகைகள் முறையே 52 சதம் மற்றும் 67 சதமாக இருந்துள்ளது).

அட்டவணை 3.2 ஆனது 2016 இலிருந்து 2018 வரையிலான காலப்பகுதிக்குரிய வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்புச் செலவு என்பவற்றின் வகையீட்டினை வழங்குகின்றது.

| அட்டவணை 3.2- வருமான சேகரிப்பு,மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவு(ரூபா.மில்) | | | |
|---|---|---|---|
| விபரணம் | **2016** | **2017** | **2018** |
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 238,398.61 | 229,841.81 | 257,366.66 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 20,458.17 | 44,719.76 | 52,978.51 |
| பெறுமதிசேர் வரி | 283,451.51 | 443,739.47 | 461,650.62 |
| தேசக் கட்டுமான வரி | 84,066.53 | 101,824.56 | 105,690.53 |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1,884.50 | 1,929.03 | 2,469.58 |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 737.66 | 1,333.90 | 1,196.35 |
| வாகன உரித்துடமை விதிப்பனவு | 1,579.13 | 1,650.96 | 2,191.68 |
| கடன்மீளளிப்புவரி | 0 | 0 | 4,501.17 |
| குடியகல்வுவரி | 11.05 | 4.1 | 16.68 |
| மூலதனஈட்டுகைவரு | 0 | 0 | 104.14 |
| சமூகப் பொறுப்புடமை அறவீடு | 0.84 | - | - |
| புரள்வு வரி | 16.64 | 20.75 | 88.93 |
| முத்திரைத் தீர்வை | 10,650.97 | 11,377.13 | 12,026.43 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 1.59 | 0.12 | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 8.09 | 15.95 | 40.99 |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு | 258.80 | 52.77 | 26.2 |
| காணி வரி | 22.66 | 7.38 | - |
| **மொத்த சேகரிப்பு** | **641,546.75** | **836,517.69** | **900,348.47** |
| **செலவினம்** | | | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| வேதனாதிகள் | 1,984.48 | 2,103.06 | 2,433.27 |
| பிரயாணச் செலவுகள் | 33.17 | 122.37 | 37.82 |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 107.99 | 108.89 | 116.24 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 52.56 | 60.72 | 77.65 |
| ஒப்பந்தசேவைகள் | 624.20 | 579.47 | 737.22 |
| இடமாற்றல்கள் | 38.75 | 40.09 | 42.96 |
| **மூலதன செலவினம்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 29.42 | 61.08 | 52.67 |
| கொள்ளல்கள் | 27.13 | 53.44 | 38.9 |
| திறன் கட்டியெழுப்புதல் | 55.03 | 127.82 | 180.92 |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | 1,108.39 | 1,067.93 | 288.84 |
| முதலீடு (புதியஉ.இசட்டம்) | - | 12.29 | 132.81 |
| **மொத்த செலவினம்** | **4,061.12** | **4,337.16** | **4,134.30** |
| | | | |
| **100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.63** | **0.52** | **0.46** |
| **பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக 100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.80** | **0.67** | **0.58** |

## 3.3 உள்ளக கணக்காய்வு

அனைத்து கொடுப்பனவுகள், நாளாந்த வாகனம் பயணிக்கும் தூர அட்டவணைகள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்படுபவை), கொடுப்பனவு தாள்கள், மதிப்பாய்வு சபையின் வருடாந்த அறிக்கைகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் வங்கி கணக்கிணக்கம் போன்றவற்றினை ஆய்வு செய்தல் உள்ளடங்கலான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் மேலாக, மதிப்பிழந்த காசோலைகள் மீதான வரவேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்வினை மேற்கொள்ளல், வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பான மீள் நிதியிடல்கள், கட்டுநிதி கணக்கு மற்றும் உபகட்டுநிதி பதிவேடுகளை செவ்வை பார்த்தல் பிராந்தியஅலுவலகங்களைகண்கானித்தல்என்பன உள்ளக கணக்காய்வு கிளையினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

# அத்தியாயம் 4

# தவறுகையில் உள்ள வரிகள்

## 4.1 தவறுகையில் உள்ள வரிகள்

அட்டவணை 4.1 ஆனது 2017.12.31 இலுள்ளவாறான தவறுகையிலுள்ள வரி தொகைகள், பிணக்கிலுள்ள தொகைகள் தண்டப் பணங்கள் மற்றும் சேகரிக்கத்தக்க தொகை என்பவற்றினைக் காட்டுகின்றது.

அட்டவணை 4.1 - 2017.12.31 இலுள்ளவாறான நிலுவையிலுள்ள வரிகளின் பகுப்பாய்வு

| வரி வகை | தவறவிடப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா | தண்டப்பணம் ரூபா | தண்டப்பணம் நீங்கலான பிணக்கு வரி (ரூபா) | பிணக்கு வரிகளுடன் தொடர்புடைய தண்டப்பணம் | சேகரிக்கத்தக்க வரி (ரூபா) | சேகரிக்கத்-தக்க தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| வருமான வரி | 119,540,104,679 | 72,939,998,624 | 112,000,816,315 | 66,915,465,836 | 7,539,288,364 | 6,024,532,788 |
| வருமான வரி மீதான மிகைக் கட்டணம் | 258,960,780 | 165,710,940 | 255,044,714 | 163,763,121 | 3,916,066 | 1,947,819 |
| வருமான வரி (வட்டி மீதான நி. வை. வரி ) | 1,508,265,061 | 688,812,235 | 214,441,597 | 91,808,201 | 1,293,823,464 | 597,004,034 |
| பெறுமதிசேர் வரி | 56,966,946,611 | 41,619,931,025 | 42,597,804,741 | 32,783,899,407 | 14,369,141,870 | 8,836,031,618 |
| பெறுமதிசேர் வரி (நிதிச் சேவைகள்) | 7,643,997,409 | 4,153,954,002 | 7,609,732,579 | 4,118,186,802 | 34,264,830 | 35,767,200 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 3,849,895,152 | 3,319,060,447 | 3,120,031,452 | 2,799,561,786 | 729,863,700 | 519,498,661 |
| தேசக் கட்டுமான வரி | 11,404,952,534 | 8,063,787,790 | 5,297,328,168 | 4,419,749,404 | 6,107,624,366 | 3,644,038,386 |
| தேசக்கட்டுமான வரி (நிதிச் சேவைகள்) | 391,312,502 | 190,590,856 | 383,119,329 | 186,520,478 | 8,193,173 | 4,070,378 |
| முத்திரைத் தீர்வை | 9,732,724 | 4,866,362 | - | - | 9,732,724 | 4,866,362 |
| பற்று வரி | 2,215,581,368 | - | 2,215,581,368 | - | - | - |
| புரள்வு வரி | 1,722,835,502 | 863,949,677 | 1,722,835,502 | 863,949,677 | - | - |
| பொருட்கள் சேவைகள் வரி | 934,955,433 | 1,011,928,821 | 934,955,433 | 1,011,928,821 | - | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 1,267,057,545 | 529,265,383 | 1,267,057,545 | 529,265,383 | - | - |
| தேச பாதுகாப்பு பங்களிப்பு | 14,286,141 | 4,471,485 | 14,286,141 | 4,471,485 | | |
| செல்வ வரி | 849,952 | 403,652 | 849,952 | 403,652 | - | - |
| நன்கொடை வரி | 2,409 | 1,204 | 2,409 | 1,204 | - | - |
| சமூக பொறுப்பு அறவீடு | 1,848,479 | 146,995 | 1,848,424 | 146,995 | 55 | - |
| திரண்ட தண்டப்பணம் | - | 252,837,716 | - | 137,202,448 | - | 115,635,268 |
| மொத்தம் | **207,731,584,281** | **133,809,717,214** | **177,635,735,669** | **114,026,324,700** | **30,095,848,612** | **19,783,392,514** |

குறிப்பு:

i. தவறுகையிலுள்ள மொத்த வரிகள் உரிய வரிகளின் திரண்ட மீதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், மேலே வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறான தவறவிடப்பட்ட வரிகள் முழுமையான நிலுவையாக இருக்கமாட்டாது.

ii. ஏதாவதொரு காரணத்திற்காக மதிப்பீடொன்று வழங்கப்படுகையில், நிலுவைகள் அல்லது தவறுதல்கள் ஏற்படுகின்றன. (வரி செலுத்துநர்கள் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்காமை, விபரத்திரட்டுக்களின் அடிப்படையில் வரிகள் செலுத்தப்படாமை, பிழையான விபரத்திரட்டுக்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் போன்றன சமர்ப்பிக்கப்படுதல்). உரிய திகதியில் கொடுப்பனவு செய்யாமைக்காக பொதுவாக 10% தண்டப்பணமும், வருமான வரியினைப் பொறுத்தமட்டில் வரியின் 50% இனை அடையும் வரையில் கொடுப்பனவு செலுத்தாமைக்கு ஒவ்வொரு மாதமும் மேலும் 2% விதிக்கப்படுவதுடன், பெறுமதிசேர் வரியினைப் பொறுத்தவரையில் ஆகக் கூடுதலாக 100% விதிக்கப்படும்.

iii. சில வரி மதிப்பீடுகளுக்கெதிராக வரி செலுத்துநர்கள் மேன்முறையீடு மேற்கொள்ளப்படுவதனைத் தொடர்ந்து வரி செலுத்துநரின் மேன்முறையீட்டு உரிமைகள் என்ற வகையில் இணக்கப்பாடுகள், சில விடயங்களில் உயர்ந்த மேன்முறையீட்டு மட்டங்களில் (வரி மேன்முறையீட்டு ஆணையாளர், மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவை) எட்டப்படுமிடத்து, அது தவறவிடப்பட்ட வரியாகக் கருதப்படுதல் வேண்டும். அந்த தவறவிடப்பட்ட வரித்தொகையானது பிணக்கிலுள்ள வரித்தொகையாக அல்லது வரி மீதான தண்டப் பணமாக வகுப்பாக்கம் செய்யப்படும். மேன்முறையீட்டினை இணக்கப்பாடு செய்யும் போது தண்டப் பணத்துடன் சேர்க்கப்பட்ட வரி மதிப்பீட்டுத் தொகையின் ஏதேனும் அதிகரிப்பு விடுவிப்புச் செய்யப்படும்.

iv. சேகரிக்கத்தக்க வரியினை சேகரிப்பதற்க்கான சேகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

## 4.2 தவறுகையிலுள்ள வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள்

அ. தவறுகையிலுள்ள வரிகளை அறவீடு செய்வதற்காக உரிய சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. அத்தகைய நடவடிக்கைகள், வரி மதிப்பீடுகளை வழங்குவதிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் கணிசமானளவு தொகை தவறுகையில் இருந்துள்ளமையினைக் காண முடிந்துள்ளது.

